A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.

-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN


4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


## முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்

**மேல்முறையீட்டு மனு எண் 29 / 2024**

திரு P.A.M. சுந்தரவேல்,
த/பெ. P.A.A. மாணிக்கவாசக நாடார்,
எண்.294, கட்டபொம்மன் தெரு,
விருதுநகர் மாவட்டம் – 626 001.

………மேல்முறையீட்டாளர்
(திரு P.A.M. சுந்தரவேல்)

எதிர்

1) மேற்பார்வை பொறியாளர்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
65/1, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

2) செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ விருதுநகர்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. செயற்பொறியாளர் /பகிர்மானம்,
TNEB, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

3) உதவி செயற்பொறியாளர்/ஊரகம்/ விருதுநகர்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

4) உதவி மின்பொறியாளர்/ ஊரகம்/ தெற்கு/ விருதுநகர்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின் பொறியாளர்/ ஊரகம்/ தெற்கு,
வள்ளிகுளம், விருதுநகர்.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு T. முரளிதரன், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ விருதுநகர்
திரு N. சங்கர் ஆனந்த், உதவி செயற்பொறியாளர்/ஊரகம்/ விருதுநகர்
திரு S. ரபியத்துல் ஆதவியா, உதவி மின்பொறியாளர்/ ஊரகம்/ தெற்கு/ விருதுநகர் )

**<u>மனு பெறப்பட்ட நாள்: 23-04-2024</u>**
**<u>கேட்புரை நாள்: 06-06-2024</u>**

**<u>ஆணை நாள்: 21-06-2024</u>**

23.04.2024 அன்று பெறப்பட்ட திரு P.A.M. சுந்தரவேல், த/பெ. P.A.A. மாணிக்கவாசக நாடார், எண்.294, கட்டபொம்மன் தெரு, விருதுநகர் மாவட்டம் – 626 001 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 29/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 06.06.2024 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**<u>ஆணை</u>**

1. **<u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

தனது மின் இணைப்பு மின் துண்டிப்பு செய்த பின்பு மின் கட்டணம் செலுத்தும் நிலையில் கூடுதலாக எதிர்மனுதாரரால் கோரும் மாத சிறும கட்டணத்தை விலக்கு அளிக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **<u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 தனது மின் இணைப்பு மின் துண்டிப்பு செய்த பின்பு மின் கட்டணம் செலுத்தும் நிலையில் கூடுதலாக எதிர்மனுதாரரால் கோரும் மாத சிறும கட்டணத்தை விலக்கு அளிக்குமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மனுதாரரின் மின் இணைப்பு எண்ணில் மின் கட்டணம் செலுத்தாததால் மின் துண்டிப்பு செய்யப்பட்டு விட்டதாகவும், சில மாதங்கள் கழித்த நிலுவை மின் கட்டணத் செலுத்த சென்ற போது மின் துண்டிப்பு செய்த பின்பு உள்ள மாதங்களுக்கும் குறைந்தபட்ச தொகையுடன் சேர்த்து கட்டணம் செலுத்துமாறு மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் விருதுநகர் மின் பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 16.02.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், விருதுநகர் மின் பகிர்மான வட்டம் 30.03.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 விருதுநகர் மின் பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.03.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *மனுதாரரின் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிற்கு தற்பொழுது வரை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு என்பது குறித்து உடனடியாக எழுத்துப்பூர்வமான தகவலை மனுதாரருக்கு அளிக்கும்படியும், மனுதாரரின் நிரந்தர மின் துண்டிப்பிற்கான மதிப்பீட்டை விரைவில் அனுமதி பெற்று வாரிய விதிகளின்படி மனுதாரருக்கு திருப்பியளிக்க வேண்டிய தொகையை விரைவில் திருப்பியளிக்க உத்தரவிட்டும், மன்ற மனு எண் 13/2024 இம்மன்றத்தால் முடித்து வைக்கப்படுகிறது."*

## 4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 06.06.2024 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் திரு P.A.M. சுந்தரவேல் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு T. முரளிதரன், செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ விருதுநகர், திரு N. சங்கர் ஆனந்த், உதவி செயற்பொறியாளர்/ஊரகம்/ விருதுநகர் மற்றும் திரு S. ரபியத்துல் ஆதவியா, உதவி மின்பொறியாளர்/ ஊரகம்/ தெற்கு/

விருதுநகர், விருதுநகர் மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 மேற்படி MET1 மின் இணைப்பு தனது பெயரில் வாங்கி கடந்த முப்பத்தி எட்டாண்டுகளாக அல்லம்பட்டி பாரதி நகரில் தனக்கு சொந்தமான இடத்தில் தொழில் செய்து வந்ததாகவும், தொழில் நழிவடைந்ததால் மின் கட்டணம் உரிய நேரத்தில் கட்டப்படாத சூழ்நிலை உருவாகிவிட்டதாகவும், மின் கட்டணத்தை உரிய நேரத்தில் கட்டாததால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 தனது தொலைபேசிக்கு வாரிய அலுவலகத்திலிருந்து தனக்கு எந்தவிதமான குறுஞ்செய்தி இதுவரை வரவில்லை இரண்டு மாதம் கழித்து மின் கட்டணம் கட்ட சென்றதாகவும், ஏற்கனவே சர்வீஸ் டிஸ்கனெக்ஷனுக்கு முன் வந்த கடைசி மின் அளவுக்குரிய பணத்தை கட்ட சென்ற பொழுது கம்யூட்டரில் கூடுதலாக பணம் கட்டவேண்டியதாக காட்டியது எதற்காக என்பதற்கான விபரங்கள் கட்டவேண்டி கடைசி தேதி என எதுவும் தனக்கு குறுஞ்செய்தியாக வாரிய அலுவலகத்திலிருந்து வரவில்லை எனவும், விபரம் யாரும் வாரிய அலுவலகத்திலிருந்து தெரிவிக்கவில்லை எனவும், பின்னர் அடுத்தமாதம் பணம் சேகரித்துக்கொண்டு பின் கட்டணம் கட்ட சென்றதாகவும், ஐம்பதாயிரத்திற்கு மேல் கணினியில் காட்டியது மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்பும்

நான்கு மாதத்திற்கு கட்டணம் கூடுதலாக கட்டசொல்வது எந்த வகையில் நியாயம் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு அடுத்த மாதத்தில் கூடுதலாக விதிக்கப்பட்டுள்ள கட்டண விபரங்களுடன் டிமான்ட் நோட்டிஸ் குறுஞ்செய்தி கொடுக்கவில்லை எனவும், எனவே தெளிவான விபரங்கள் கொடுக்காமல் கணினியில் காட்டும் தொகையை கட்ட வேண்டும் என்பது எப்படி நியாயமாகும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தான் நியாயமாக உபயோகப்படுத்திய பில் கட்டணத்தை மட்டும் கட்டுவதில் ஆட்சேபனை இல்லை எனவும், தான் தொழில் தொடர வாய்ப்பில்லாதபொழுது பல கட்டணங்களை எந்த விபரமும் தெரிவிக்காமல் தனது கணக்கில் பாக்கியாக சேர்த்துள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மின்சாரமே பயன்படுத்தாமல் மின் கட்டணம் கட்ட சொல்வது எந்த வகையில் நியாயம், தனக்கு வயதாகிவிட்டதாலும் அரசின் விதிமுறைகளின்படி தொழில் செய்யக்கூடிய சூழ்நிலை இல்லாததாலும் மின்சாரத்தை பயன்படுத்தாமல் மின் கட்டணம் கட்ட தனக்கு தோது இல்லாததாலும் மின் இணைப்பு வேண்டாமென எழுதிக்கொடுத்துவிட்டதாகவும், எனவே தான் பயன்படுத்திய மின் அளவுக்குரிய கட்டணத்தையும் அதை உரிய நேரத்தில் கட்டத்தவறியதற்குரிய அபராதத் தொகையையும் மின் இணைப்பு துண்டிப்பதற்கான கட்டணத்தையும் மட்டும் ஏற்கனவே தான் கட்டியிருக்கும் தொகையிலிருந்து எடுத்துக் கொண்டு மீதமுள்ள டிபாசிட் தொகையை தனக்கு உடனடியாக வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

5.6 தொழில் முனைவோரை ஊக்குவிப்பது தான் அரசின் தலையாய கடமை எனவும் ஒரு உபயோகிப்பாளர் தொழில் நழிவடைந்ததால் தான் மின் கட்டணம் கட்டமுடியாத சூழ்நிலைக்கு தள்ளப்படுகிறார் என்றும் அந்த சூழ்நிலையில் மின்சாரம் உபயோகித்ததற்கான மின் கட்டணம் கட்டவில்லையென்றால் மின் இணைப்பு துண்டிக்கப்படுகிறது என்றும் மேலும் தொடர்ந்து தொழில் செய்யவில்லையென்றால் மின் இணைப்பு தற்காலமாக துண்டிக்கப்பட்ட பின்பும் அதற்கான fixed charge

உபயோகிக்காமல் வசூலிப்பது என்பது எப்படி நியாயம் எனவும் உபயோகித்த மின் கட்டண தொகையையே கட்ட முடியாத சூழ் நிலையில் உள்ள பொழுது உபயோகமே படுத்தாத மின் இணைப்பே இல்லாத பொழுது வாங்கியுள்ள குதிரைத்திறனுக்குரிய fixed charge கட்ட சொல்வது எப்படி நியாயமாகும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 எனவே தொடர்ந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாத சூழ் நிலையில் மின் இணைப்பு தேவையில்லை எனக்கோரும் உபயோகிப்பாளரிடம் fixed charge வசூலிக்காமல் BPSC DC தொகை போன்ற கட்டணங்களை மட்டும் வசூலிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு நலிவுற்றவர்கள் சார்பாக கேட்டுக் கொள்வதாகவும் இந்த கட்டணம் வாங்காததால் அரசுக்கு ஒரு பெரிய இழப்பீடு இல்லை எனவும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட சர்வீஸ் கனெக்ஷனுக்கு peak hour charges வசூலிக்கப்படுகிறது, இது எந்த விதத்தில் நியாயம் என்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்பு மேற்கொண்டு தொடர விருப்பமில்லாத உபயோகிப்பாளர்களுக்கு கட்ட வேண்டிய மின் பயனீட்டு கட்டணம், தாமத கட்டணம், அதற்குண்டான வட்டி மற்றும் BPSC DC தொகையை மட்டும் கணக்கிட்டு வசூலிக்க உத்தரவிட வேண்டும் என்று மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்பு உபயோகப்படுத்தாத KW அடிப்படையில் fixed charge விதிக்கும் சட்ட விரோத விதிமுறையை நீக்குமாறு கேட்டுக்கொள்வதாகவும் சட்டத்தில் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்பு தொடர்ந்து தொழில் செய்ய மின் இணைப்பு தேவையில்லை என கோருபவர்களுக்கு மின் உபயோகித்தவர்கள் இனி நலமாக இருக்க அரசின் உதவியாக மின்இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்பு வசூலிக்கும் fixed charge வாங்குவதை நீக்க வேண்டும் என்ற நியாயமான தனது கோரிக்கையை அரசு செவி சாய்க்கும் என நம்புவதாகவும், தனது கோரிக்கை அரசுக்கு எதிரானதல்ல பாமரனுக்கு அரசு வழங்கும் சலுகையாக இருக்கட்டும் என்றும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் திரு PAM. சுந்தரவேல் அவர்கள் மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் அளித்த புகாரில் தனது துண்டிக்கப்பட்ட தொழிற்சாலை மின் இணைப்பில், துண்டிக்கப்பட்ட போது என்ன மின் கட்டணம் வந்ததோ, அதை மட்டுமே வசூல் செய்ய வேண்டும் என்றும், மின் இணைப்பில் உள்ள மின்பளுவை குறைத்து 10 HP மட்டும் வழங்கும்படியும் கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் 20.03.2024 அன்று விருதுநகர் நுகர்வோர் மன்றத்தால் கேட்புரை நடத்தப்பட்டு மனுதாரரின் துண்டிக்கப்பட்ட மின் இணைப்பிற்கு தற்பொழுது வரை செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை எவ்வளவு என்பது குறித்து உடனடியாக எழுத்துப்பூர்வமான தகவலை மனுதாரருக்கு அளிக்கும்படியும், மனுதாரரின் நிரந்தர மின் துண்டிப்பிற்கான மதிப்பீட்டை விரைவில் அனுமதி பெற்று வாரிய விதிகளின்படி மனுதாரருக்கு திருப்பியளிக்க வேண்டிய தொகையை விரைவில் திருப்பியளிக்க உத்தரவிட்டு ஆணை வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரர் குறிப்பிடும் மின் இணைப்பு எண்: ME−71 (227−014−71) IIIB வீதப்பட்டியலில் திரு. PAM. சுந்தரவேல் என்பவர் பெயரில் 23.10.2003 அன்று வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் மின் இணைப்பில் அவரது கைபேசி இணைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி மின் இணைப்பில் 20.10.2023 தேதியின் போது கணக்கீடு செய்த மின் கட்டணத் தொகையாக ரூ. 18,883/− கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், திரு. P.AM சுந்தரவேல் அவர்களின் consumer ledger இத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின் கணக்கீடு செய்து கணினியில் பதிவு செய்தவுடன் TNERC Supply Code ன்படி மின் கட்டணம் குறித்த குறுஞ்செய்தி மின்நுகர்வோர்க்கு அனுப்பப்பட்டதாகவும், காலக்கெடு முடிவதற்கு 3 தினங்களுக்கு முன்னதாக நினைவூட்டல் குறுஞ்செய்தியும் மின் நுகர்வோருக்கு அனுப்பப்படுகிறது எனவும், எனவே, Disconnection Notice வழங்கப்படவில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திரு.P.A.M.சுந்தரவேல் அவர்கள் உரிய காலகெடுவுக்குள் மின்கட்டணம் செலுத்தாததால், 14.11.2023 அன்று TNERC Supply Code விதிமுறைகளின்படி மின் துண்டிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் TNERC Supply Code Regulation 14(5) கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"(5) if the amount of any bill remains unpaid beyond the period specified, the License may also, without prejudice to any of its rights under the agreement entered into by the consumer with the Licensee, order supply of electricity to the consumer to be discontinued forthwith without further notice and keep the service connection disconnected until full payment for all obligations pending and the charge for the work of disconnection and reconnection has been paid. Such disconnection of supply of electricity shall not relieve the consumer of his liability to pay the minimum monthly charges nor shall such discontinuance affect any right, claim, demand or power which may have accrued to the licensee hereunder."*

6.4 மேற்கண்ட விதிமுறைகளின் படியும் மற்றும் TNERC Supply Code 4 மற்றும் 4C படியும், TNERC Tariff order 2023 3.2.1.g ல் "In the event of disconnection of services, the consumer shall be liable to pay the fixed charges applicable for the respective category during the disconnection period" எனவும் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும், எனவே கட்டணத்தை உரிய காலத்திற்குள் செலுத்தாமல் தாமதமாக மின் கட்டணம் செலுத்தும் தினம் வரை Monthly Minimum charges மற்றும் BPSC, DC & RC கணக்கிடப்பட்டு வசூல் செய்ப்பட்டுள்ளதாகவும், உரிய வதிகளின் படி Monthly Minimum charges, வசூல் செய்பப்படுவதை மனுதாரர் செலுத்த மறுப்பது ஏற்புடையதல்ல என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் திரு PAM சுந்தரவேல் அவர்கள் தனது கடிதத்தில் தொடர்ந்து மின் இணைப்பு துண்டிக்கப்பட்டு தொழில் செய்ய முடியாத சூழ்நிலையில் மின் இணைப்பு தேவையில்லை எனக்கோரும் உபோகியாரிடம் fixed charge வசூலிக்காமல் BPSC, DC தொகை போன்ற கட்டணங்களை மட்டும் வசூலிக்க உத்தரவு பிறப்பிக்குமாறு தெரிவித்தார். இது தொடர்பாக TNERC Distribution Code 33 (5)ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

*"in the case of termination of the agreement either by the consumer under sub-regulation (3) or by the licensee under sub-regulation(4), as the case may be, the licensee shall recover the dues if any due from the consumer after making such adjustment of the dues, due to him by the consumer as may be necessary to clear the dues from the consumer against the security deposit or additional security deposit of any other deposit made by the consumer and after making such adjustment, refund the balance deposit, if any, to the consumer within three months from the date of termination of the agreement."*

எனவே, TNERC Supply Code Regulation 14 (5) மற்றும் TNERC Distribution Code 33 (5)ன் படியும் மின் இணைப்பை நிரந்தர மின் துண்டிப்பு செய்வதற்க்கு முன்னர் அதன்

மின் நுகர்வோர் நிலுவையில் உள்ள அனைத்து கட்டணங்களையும் செலுத்தவேண்டும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும் மின் நுகர்வோர் திரு PAM சுந்தரவேல் அவர்களின் நிரந்தர மிள் துண்டிப்பு செய்ய கோரிய மனுவின் அடிப்படையிலும் நிலுவை தொகையை தனது டெபாசிட் தொகையிலிருந்து கழித்துக்கொண்டு மீதமுள்ள தொகையை வழங்குமாறு தெரிவித்துள்ளதால் மேற்படி மின் இணைப்பானது 23.02.2024 அன்று நிரந்தர மின் துண்டிப்பு செய்யப்பட்டு மின் அளவி கழற்றப்பட்டுள்ளதாகவும், இந்த மின் இணைப்பிற்கான கணக்கு முடிக்கப்பட்டு, மீதம் தொகையை திரும்ப வழங்குவதற்கு மின் வாரிய தலைமை அலுவலகத்திடத்திலிருந்து நிதி பெறுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறதாகவும், மனுதாரருக்கு திருப்பியளிக்க வேண்டிய தொகை குறித்த Account Closer Statement இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், நிதி பெறப்பட்டதும் திருப்பியளிக்க வேண்டிய தொகையான ரூ.57,243/– ஐ மின் நுகர்வோரது வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்ற விபரம் திரு P.A.M. சுந்தரவேல் அவர்களுக்கு க.எண். உ.க.அ/வபி/விருது/க.மே.8/ கோ:CGRF/அண்.325/24, நாள்:10.05.2024 மூலம் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு:</u>

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

1. மின் துண்டிப்பு செய்யப்பட்ட நிலையில் வசூலிக்கப்படவேண்டிய தொகை குறித்து விதிகளில் கூறப்பட்டுள்ளது யாது?
2. மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பை உபயோகப்படுத்தாத நிலையில் மின் கட்டணம் விதிக்கப்பட்டதை ரத்து செய்ய கோரும் கோரிக்கை ஏற்புடையதுதானா?

## 8.0 <u>வழக்கெழு வினா 1–ற்கான தீர்வு:</u>

8.1 மின் துண்டிப்பு செய்யப்பட்ட நிலையில் வசூலிக்கப்படவேண்டிய தொகை குறித்து அறிய தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார

வழங்கல் விதித்தொகுப்பு விதி 6 மற்றும் 14–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"**6. சிறுமக் கட்டணங்கள் (Minimum charges):**

மின்நுகர்வோர், உரிமதாரரிடம் கீழே விவரிக்கப்பட்டவாறு மின்னிணைப்பு ஒவ்வொன்றையும் பொறுத்து சிறுமக் கட்டணங்கள்/ நிலைக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.

மின்சாரம் எதுவும் நுகரப்படாதிருக்கிற போதும் கூட அல்லது நீதிமன்றத்தின் ஆணைகளின் காரணங்கள் உள்ளடங்களை எந்த காரணங்களுக்காகவும், மின்னிணைப்புகள் துண்டிக்கப்படுகிற போதோ அல்லது வழங்கப்படும் மின்சாரத்தின் விலையானது குறைந்தபட்ச கட்டணங்களுக்கும் குறைவாக இருக்கிய போதோ, மாதாந்திர சிறுமக் கட்டணங்கள்/ நிலைக்கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டியதாகும்.

***14. காலக்கெடு தேதிகளும் அறிவிப்புக் கால இடைவெளிகளும்:***

*(1) உரிமதாரர் மின்சாரம் சார்ந்த கட்டணத்தைச் செலுத்த பின்வரும் சிறும (Minimum) நாட்களைக் கெடு தேதிகளுக்கும் அறிவிப்புக் கால இடைவெளிகளுக்கும் தருதல் வேண்டும்*

*(a) தாழ்வழுத்த மின்னிணைப்புகளுக்கு, கெடு தேதி மின்னளவி அட்டையில் பதிவு செய்த பிறகு 5 நாட்களுக்குக் குறையாமலும், கட்டணம் செலுத்தாமைக்காகத் துண்டிப்பு செய்வதற்கான அறிவிப்புக் கால இடைவெளியாக தெளிவான முழு (Clear) 15 நாட்களும் தரவேண்டும். அறிவிப்புக் கால இடைவெளிக்குத் தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் ஏதும் விதிக்ககூடாது.*

*(b) உயரழுத்த மின்னிணைப்புகளுக்குக் கெடு தேதி பட்டியலிட்ட நாளிலிருந்து 7 நாட்களுக்குக் குறையாமல் தரவேண்டும். கெடு தேதி விடுமறை நாளாக அமைந்து விட்டால் அதை கெடு தேதியின் மறுநாள் வரை நீட்டிக்க வேண்டும். கட்டணம் செலுத்தாமைக்கான துண்டிப்புக்கு முன்பு தெளிவான முழு 15 நாட்கள் அறிவிப்பு கால இடைவெளி தரவேண்டும். அறிவிப்பு காலத்தில் கடைசி நாள் விடுமுறை நாள் ஆகும் நேர்வில் அறிவிப்பு காலம் நீட்டிக்கப்படும் மற்றும் மின் துண்டிப்பை தவிர்ப்பதற்கான கடைசி செலுத்துகை நாளானது அடுத்த பணிநாளாகும். விதிமுறையில் குறிப்பிட்டபடி உயர் அழுத்த மின்னிணைப்புகளுக்கு அறிவிப்புக் கால இடைவெளிக்கும் தாமதச் செலுத்த உபரிக் கட்டணம் விதிக்க வேண்டும். 7–4*

*2. நுகர்வோர் மின்னளவி அட்டையில் உரிமதாரர் குறிப்பிட்ட கால இடைவெளிக்குள் மின்னோட்ட நுகர்வுக் கட்டணத்தைச் செலுத்தாத தாழ அழுத்த நுகர்வோர்களைப் பொருத்தவரையில் மின்ளையி அட்டையில் உள்ள அறிவிப்புக்கால இடைவெளியே நுகர்வோருக்கான கட்டணம் செலுத்துவதற்கான அறிவிப்பாகக் கொள்ள வேண்டும். அறிவிப்புக் கால இடைவெளியில் கட்டணத்தைச் செலுத்தினால் அதைப் பெற்றுக் கொள்ளலாம். அறிவிப்புக் கால*

*இடைவெளியின் கடைசி நாள் விடுமுறை நாளாக அமைந்துவிட்டால் அறிவிப்புக் கால இடைவெளி நீட்டிக்கப்பட்டு, துண்டிப்புத் தவிர்ப்பதற்குக் கட்டணம் செலுத்தும் கடைசி நாள் அடுத்த பணிசெய்யும் நாளாக அமைய வேண்டும்.*

*3. மேற்குறிப்பிட்டபடியான அறிவிப்புக் கால இடைவெளி முடிவுற்றதும் தாழ் அழுத்த நுகர்வோர்களின் மின் வழங்கள் துண்டிக்கப்படும்.*

*4. உயர் அழுத்த நுகர்வோர்களுக்குத் தந்த பட்டியல்படியும் தாழ் அழுத்த நுகர்வோர்களின் மின்னளவி அட்டையில் பதிந்த கட்டணப்படியும் உள்ள கட்டணம், இந்த விதித்தொகுப்பில் விதித்துள்ளபடி தேவைப்பட்டால், தாமதமாகக் கட்டுவதற்குரிய தா.செ.உக தொகையுடன் செலுத்தப்படவேண்டும்.*

*5. குறிப்பிட்ட கால இடைவெளிக்குப் பிறகும் ஏதேனும் பட்டியல் தொகை செலுத்தப்படாமலிருந்தால், உரிமதாரர், நுகர்வோருடன் செய்து கொண்ட இசைவுப் பத்திரத்தில் உள்ள அவருக்குரிய உரிமைகள் எதற்கும் குந்தகமேதும் இல்லாமலும், உரிமதாரர். மேலும் அறிவிப்பேதும் தராமலும் உடனடியாக மின்னிணைப்பைத் துண்டிக்கும்படி ஆணையிட்டு நிலுவையில் உள்ள அனைத்துக் கடப்பாடுகளையும் துண்டித்து மீளிணைப்பு செய்வதற்கான கட்டணத்தையும் சேர்த்துக் கட்டும்வரையில். மின்னிணைப்புகளில் ஏற்படும் தொடர்ச்சியின்மை, மாதச் சிறுமக் கட்டணத்தைச் செலுத்த வேண்டியமையிலிருந்து விடுவிக்க இங்கு விதித்திருக்கும் உரிமதாரரின் உரிமையையோ, கோரலையோ கேட்பையோ அல்லது அதிகாரம் எதையுமோ கட்டுப்படுத்தாது."*

மேற்கூறிய விதிகளை ஆராயும் பொழுது மின் நுகர்வோர் உரிய காலகட்டத்திற்குள் மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மறு இணைப்பு பெறும் காலம் வரை நிலுவையில் உள்ள மின் கட்டணம், அதற்கான அபராத தொகை, மாத சிறும கட்டணம் மற்றும் மறு இணைப்பு கட்டணம் செலுத்த வேண்டும் என்பது தெரிய வருகிறது.

## 9.0 <u>வழக்கெழு வினா 2-ற்கான தீர்வு:</u>

9.1 மேல்முறையீட்டாளர் மின் இணைப்பு எண்.239-006-815-ஐ தனது பெயரில் வாங்கி கடந்த முப்பத்தி எட்டாண்டுகளாக அல்லம்பட்டி பாரதி நகரில் தனக்கு சொந்தமான இடத்தில் தொழில் செய்து வந்ததாகவும், தொழில் நழிவடைந்ததால் மின் கட்டணம் உரிய நேரத்தில் கட்டப்படாத சூழ்நிலை உருவாகிவிட்டதாகவும், மின் கட்டணத்தை உரிய நேரத்தில் கட்டாததால் மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

9.2 மின் துண்டிப்புக்கு முன் வந்த கடைசி மின் அளவுக்குரிய பணத்தை கட்ட சென்ற பொழுது கம்ப்யூட்டரில் கூடுதலாக பணம் கட்டவேண்டியதாக காட்டியது எதற்காக என்பதற்கான விபரங்கள், கட்டவேண்டிய கடைசி தேதி என எதுவும் தனக்கு குறுஞ்செய்தியாக வரவில்லை எனவும், வாரிய அலுவலகத்திலிருந்து யாரும் விவரம் தெரிவிக்கவில்லை எனவும், பின்னர் அடுத்த மாதம் பணம் சேகரித்துக்கொண்டு மின் கட்டணம் கட்ட சென்றபொழுது ஐம்பதாயிரத்திற்கு மேல் கணினியில் காட்டியதாகவும், மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்பும் நான்கு மாதத்திற்கு கூடுதலாக கட்டணம் கட்டச்சொல்வது எந்த வகையில் நியாயம் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

9.3 அரசின் விதிமுறைகளின்படி தொழில் செய்யக்கூடிய சூழ்நிலை இல்லாததாலும் மின்சாரத்தை பயன்படுத்தாமல் மின் கட்டணம் கட்ட தனக்கு தோது இல்லாததாலும் மின் இணைப்பு வேண்டாமென எழுதிக்கொடுத்துவிட்டதாகவும், எனவே தான் பயன்படுத்திய மின் அளவுக்குரிய கட்டணத்தையும் அதை உரிய நேரத்தில் கட்டத்தவறியதற்குரிய அபராதத் தொகையையும் மின் இணைப்பு துண்டிப்பதற்கான கட்டணத்தையும் மட்டும் ஏற்கனவே தான் கட்டியிருக்கும் தொகையிலிருந்து எடுத்துக்கொண்டு மீதமுள்ள டெபாசிட் தொகையை தனக்கு உடனடியாக வழங்குமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

9.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் மின் இணைப்பு: 227-014-71, IIIB வீதப்பட்டியலில் திரு. PAM. சுந்தரவேல் என்பவர் பெயரில் 23.10.2003 அன்று வழங்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரரின் மின் இணைப்பில் அவரது கைபேசி இணைக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி மின் இணைப்பில் 20.10.2023 தேதியின் போது கணக்கீடு செய்த மின் கட்டணத் தொகையாக ரூ. 18,883/- கணக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின் கணக்கீடு செய்து கணினியில் பதிவு செய்தவுடன் TNERC Supply Code ன்படி மின் கட்டணம் குறித்த குறுஞ்செய்தி மின்நுகர்வோர்க்கு அனுப்பப்பட்டதாகவும், காலக்கெடு முடிவதற்கு 3 தினங்களுக்கு முன்னதாக நினைவூட்டல் குறுஞ்செய்தியும் மின் நுகர்வோருக்கு அனுப்பப்படுகிறது எனவும், உரிய காலகெடுவுக்குள் மின்கட்டணம் செலுத்தாததால், 14.11.2023 அன்று மேல்முறையீட்டாளரின் மின் இணைப்பு மின் துண்டிப்பு செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

9.5 மேற்கூறிய வாதி பிரதிவாதி அடிப்படையில் மேல்முறையீட்டாளருக்கு மின் கட்டணம் செலுத்தும் கால கெடு முடிவதற்கு 3 தினங்களுக்கு முன்பே குறுஞ்செய்தி அனுப்பட்டது தெரியவருகிறது. மேல்முறையீட்டாளர் அக்காலகட்டத்திற்குள் நிலுவையில் உள்ள மின் கட்டணத்தை செலுத்தவில்லை என்பதை அறிய முடிகிறது. எனவே எதிர்மனுதாரரால் 14.11.2023 அன்று மின் துண்டிப்பு செய்யப்பட்ட செயல் சரியே என்று அறிய முடிகிறது. இந்நிலையில் ஒருவருக்கு மின் துண்டிப்பு செய்யப்பட்டால் மீண்டும் மின் இணைப்பு பெறுவதற்கு தமிழ்நாடு ஒழுங்குமுறை ஆணை மின் வழங்கல் விதி கண்டுப்பிடிப்பு (1)–இல் விவரிக்கப்பட்டுள்ளது.

9.6 அதன் அடிப்படையில் மின் நுகர்வோர் உரிய காலகட்டத்திற்குள் மின் கட்டணம் செலுத்தாத நிலையில் மறு இணைப்பு பெறும் காலம் வரை நிலுவையில் உள்ள மின் கட்டணம், அதற்கான அபராத தொகை, மாத சிறும கட்டணம் மற்றும் மறு இணைப்பு கட்டணம் செலுத்த வேண்டும் என்பது முடிவு செய்யப்படுகிறது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கையான மாத குறைந்தபட்ச கட்டண தொகை தள்ளுபடி செய்யும் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது. மேலும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பிறகு peak hour charges வசூல் செய்யப்படவில்லை என்பது எதிர்மனுதாரரின் ஆவணங்கள் மூலம் அறிய முடிகிறது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் புகார் தள்ளுபடி செய்யப்படுகிறது.

9.7 மேலும் தற்சமயம் மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பில் மீண்டும் மறு இணைப்பு வேண்டாம் என்றும், ஆகவே தனது மின் இணைப்பில் உள்ள நிலுவை தொகையிலிருந்து உரிமதாரருக்கு நிலுவையில் உள்ள கட்டணத்தை திருப்பி தருமாறு வலியுறுத்திய நிலையில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு விதி 17–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"17. (1) Agreement with respect to supply : Issues on recovery of charges:*
>
> *(1) Every consumer shall pay to the Licensee, from the date of commencement of supply till the agreement is terminated, security deposit, minimum monthly charges, fixed charges, if any, and other charges as provided in the Tariff Orders, this Code and any other orders in this regard by the Commission, from time to time. However, any consumer, who has not availed of reconnection even after the expiry of*

*termination of agreement period, the monthly minimum charges shall be payable upto the date of termination of such agreement."*

மேற்கூறிய விதிப்படி எதிர்மனுதாரர் மேற்படி மின் இணைப்பில் கணக்கு முடிக்கப்பட்டு உரிய தொகையை வைப்பு காப்பு நிதியிலிருந்து கழித்த பின்பு மின் நுகர்வோருக்கு ரூ. 57,243/–ஐ திருப்பி தருவதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக தெரிவித்தார். எனவே அத்தொகையை உரிய காலத்தில் திருப்பி தருமாறு அறிவுறுத்தப்படுகிறது.

10.0 **<u>முடிவுரை</u>:**

10.1 மேற்கூறிய பத்திகளின் அடிப்படையில், உரிய காலத்தில் மின் கட்டணம் செலுத்தாத நிலையில் அதன் தொடர்பாக அபராத தொகை மற்றும் மாத சிறும கட்டணம் வசூலித்த எதிர்மனுதாரரின் செயல் தவறில்லை என்று முடிவு செய்யப்படுகிறது.

10.2 மேலும் மேல்முறையீட்டாளரின் கோரிக்கைக்கு இணங்க மின் இணைப்பு கணக்கு முடிக்கப்பட்டதால் அவருக்கு திருப்பி அளிக்க வேண்டிய தொகையான ரூ. 57,243/–ஐ வழங்குமாறு ஆணையிடப்படுகிறது.

10.3 மேற்கண்ட தீர்வுகளை நிறைவேற்றிய பின்பு அது தொடர்பான அறிக்கையை எதிர்மனுதாரர் 30 நாட்களுக்குள் மின்குறைதீர்ப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும் என்று உத்தரவு இடப்படுகிறது.

(ந. கண்ணன்)
மின்குறைதீர்ப்பாளர்

''நுகர்வோர் இல்லையேல், நிறுவனம் இல்லை''
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1) திரு P.A.M. சுந்தரவேல்,
த/பெ. P.A.A. மாணிக்கவாசக நாடார்,
எண்.294, கட்டபொம்மன் தெரு,
விருதுநகர் மாவட்டம் – 626 001.

2) மேற்பார்வை பொறியாளர்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
65/1, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

3) செயற்பொறியாளர்/ பகிர்மானம்/ விருதுநகர்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. செயற்பொறியாளர் /பகிர்மானம்,
TNEB, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

4) உதவி செயற்பொறியாளர்/ஊரகம்/ விருதுநகர்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB, ராமமூர்த்தி ரோடு, விருதுநகர் – 626 001.

5) உதவி மின்பொறியாளர்/ ஊரகம்/ தெற்கு/ விருதுநகர்,
விருதுநகர் மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
O/o. உதவி மின் பொறியாளர்/ ஊரகம்/ தெற்கு,
வள்ளிகுளம், விருதுநகர்.

6) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7) செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8) உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.